**மீகஹகிவுல பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மீகஹகிவுல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மீகஹகிவுல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி இயலளவு அபிவிருத்தி செயற்திட்டத்தின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் பிரதேச சகைக்கு வழங்கப்பட்டிருந்த டெப் கணனியின் பெறுமதி இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | டெப் கணனியின் பெறுமதி உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து வழங்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் நிதியத்தின் கீழ் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட 02 நிர்மாண வேலைகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 2,644,033 மூலதனமாக்கப்பட வில்லை. | 2024 இன் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | அரசாங்க வங்கியொன்றில் பேணிச் செல்லப்பட்ட நிலையான வைப்பிற்காக கடந்த ஆண்டிற்குரியதாக கிடைக்கப்பெற்ற வங்கி வட்டி வருமானம் ரூபா 73,071 மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் போது தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 67,835 இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது சரியாக கணக்குகள் தயாரிக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,542,877 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 1,570,375 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 2,703,800 | 1,849,781 | 1,339,772 | 510,009 | 2,400,000 | 1,545,281 | 1,266,784 | 278,497 |
| (ii) | வாடகை | 5,161,400 | 4,479,220 | 4,228,470 | 250,750 | 4,419,300 | 4,139,820 | 3,805,664 | 334,156 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 750,000 | 400,524 | 399,275 | 1,249 | 700,000 | 336,694 | 336,694 | 0 |
| (iv) | ஏனைய வருமானம் | 3,947,498 | 3,244,964 | 2,920,809 | 324,155 | 3,243,000 | 2,137,559 | 2,137,559 | 0 |
| | மொத்தம் | **12,562,698** | **9,974,489** | **8,888,326** | **1,086,163** | **10,762,300** | **8,159,354** | **7,546,701** | **612,653** |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 342,539 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற | கடை வாடகை பதிவேட்டை நாளதுவரையாக்காமையின் காரணமாக நிலுவைகளை | நிலுவை வருமானம் அறவிடப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவை கடை வாடகை ரூபா 831,043 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்துரைத்த ரீதியில் காண்பிக்க முடியாதுள்ளது. | வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 791,673 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,331,193 பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முத்திரைக் கட்டணம் ரூபா 444,551 கிடைக்கப்பெற்றுள்ளதுடன் மேலும் நிலுவை ரூபா 1,331,193 மற்றும் நீதிமன்ற தண்டப்பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | -மேற்படி- |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 மார்ச் 01 ஆம் திகதி சபைக்குரிய பெகோ லோடர் இயந்திரம் சபையின் வாகனத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது பெற்றரி காணாமல் போனமை தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பரிசோதனை 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023.04.19 ஆம் திகதி ஆரம்ப அறிக்கை உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | முறையான பரிசோதனையொன்றை மேற் கொண்டு பொறுப்புவாய்ந்த நபரை இனங்கண்டு நட்டம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | கடமைக்கு அறிக்கையிடாத ஊழியருக்கு வருகையினை உறுதிப்படுத்தாமல் 2023 ஒக்டோபர் மற்றும் நவம்பர் என்ற 02 மாதங்களுக்காக சம்பளமாக ரூபா 51,000 செலுத்தப்பட்டிருந்தது. | உரிய உத்தியோகத்தர் தொடர்பான காரணங்களை விசாரித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | முறையான ஊழியர் முகாமைத்துவம் பேணிச்செல்லப்படல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டின் மே 09 ஆம் திகதி கொழும்பு பிரதேசத்தில் ஏற்பட்டிருந்த கலவர நிலைமையின் காரணமாக தீ வைக்கப்பட்டு அழிவடைந்த ரூபா 7,650,000 ஆன கெப் வண்டி தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பரிசோதனை நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023.09.07 ஆந் திகதி சபை செயலாளரிடமிருந்தும் சாரதியிடம் இருந்தும் பெறப்பட்டுள்ளது. | பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு இழப்பின் பெறுமதி உரிய தரப்பினரிடமிருந்து அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2017 ஆம் ஆண்டின் போது புறநெகும செயற்திட்டத்தின் நிதியத்தில் இருந்து ரூபா 17,870,885 செலவில் நிர்மாணிக்கப்பட்ட மீகஹகியுல புதிய பேருந்து நிலையத்தில் 10 கடைகள் 2022 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசம்பர் 31 வரையும் வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | முறையான பெறுகை நடைமுறைகளின் கீழ் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. | வாடகைக்கு வழங்கப்பட்ட ஆதனங்களில் வாடகை அறவிடப்படல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பேருந்து நிலைய வளவில் பேருந்துகள் உள்நுழைவதற்கும் மற்றும் இலகுவாக வெளியேறுவதற்கும் போதியளவான வீதியொன்று காணப்படாமை மற்றும் உரித்து தீர்த்து வைக்கப்படாமல் 2017 ஆம் ஆண்டின் போது புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 33,525,428 செலவில் 10 கடைகளையுடைய மேல் மாடியுடன் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | அந்த நிலையம் பேருந்து நிலையமாக பயன்படுத்தப்படாத போதும் பொது நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது . | நிர்மாணங்களுக்கு முன் முறையான திட்டமொன்றைத் தயாரித்து ஆதனங்களை கையேற்றல் வேண்டும். |